# செம்பதாகை

மலர்: 1
இதழ்: 12
மார்கழி
1979
விலை சதம்: 50
புரட்சிகர வெகுஜன ஏடு

# யூ. என். பி. ஆட்சியில் த. கூட்டணி இணையுமா?

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் தலைமையிலான தற்போதைய யூ. என். பி. ஆட்சியில் தமிழர் கூட்டணி இணைந்து தேசிய அரசாங்கமாகச் செயல்படுவதற்கான அறிகுறிகள் வலுவடைந்து வருவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இவ்விதமான நிலை ஒன்றைச் சாத்தியமற்றது என்று நிராகரிக்க முடியாத ஒரு சூழ்நிலையே தற்போது நிலவி வருகின்றது. அந்தளவிற்கு யூ. என் பி. — தமிழர் கூட்டணி உறவுகளில் நாளாந்தம் நெருக்கம் காணப்பட்டு வருகின்றன.

யூ. என். பி. யினதும் தமிழ்த் தலைவர்களினதும் வர்க்க உறவு பற்றியும் அவர்களது கூடிக்குலாவல் பற்றியும் நாம் காலத்திற்குக் காலம் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். எப்பொழுது யூ. என். பி. முன்னணி ஆட்சிக்காலத்தில் சட்டமறுப்பு, கறுப்புக்கொடி மந்திரிமார்களைப் பகிஷ்கரித்தல், துக்கதினம் அனுஷ்டித்தல், பாடசாலைப் பகிஷ்கரிப்பு என்றெல்லாம் கூட்டணித் தலைவர்களால் பல இயக்கங்கள் நடத்தப்பட்டன. கடந்த கப்பட்டதும் உண்மையே. இதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் நாம் சுட்டிக் காட்டுவது யாதெனில் இன்றைய யூ. என். பி. அரசு பதவிக்கு வந்தபின் கடந்த ஆட்சிக் காலத்திலும் பார்க்க இன—மொழி பிரதேச அடிப்

## தனிநாட்டு கோஷம் தாளுக மறையுமாம்

பதவிக்கு வருகின்றதோ அப்போதெல்லாம் தமிழ்த் தலைவர்களின் வெள்வெருட்டுப் போராட்டங்கள் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டுவிடுவதை மக்கள் தெளிவாகக் கண்டுவந்துள்ளனர். உதாரணமாகக் கடந்த ஐக்கிய ஐக்கிய முன்னணி ஆட்சி தமிழ் மக்களுக்கு இன - மொழி ரீதியில், பிரதேசரீதியில் அநீதிகளும் புறக்கணிப்புக்களும் செய்துவந்தது என்பது உண்மையே. இளைஞர்கள் பல மாதங்களாக விசாரணையின்றித் தடுப்புக்காவலில் வைக் படையில் தமிழ் மக்களுக்கு எதிராக நாசூக்கான பல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. தமிழ்மக்கள் என்றுமில்லாதவாறுபயப் பீதியுடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதைத் தமிழர் கூட்டணித் தலைவரான திரு. அமிர்தலிங்கமே ஒப்புக்கொண்டு தனது வெளிநாட்டுப் பயணத்தின்போது வாய்விட்டுக் கூறியிருந்தார். "இன்றைய ஆட்சியிலும் பார்க்க கடந்த ஆட்சிக் காலத்தில் தமிழர் மிகவும் பாதுகாப்பாக வாழ்ந்தனர்" என்று கூறியிருந்தார். இது மட்டுமன்றி உரிமைகோரிய இளைஞர்களுக்கு வடக்கில் நடந்துள்ள துர்ப்பாக்கிய நிலைமைகள் எவ்வாறானவை என்பது யாவருக்கும் தெரிந்தவையே. இன்றும் பல இளைஞர்கள் விசாரணை இன்றித் தடுப்புக் காவலில் இருக்கின்றார்கள். இவர்கள் யாரால் வழிநடத்தப்பட்டவர்கள். இத்த கூட்டணித் தலைமைப் பீடத்தால் அல்லவா?

இந்நிலையிலும்கூட தமிழர் கூட்டணி யூ. என். பி க்கு எதிராக எந்த வகையான சிறு எதிர்ப்பு இயக்கம்கூட நடத்தாது வெறும் பாராளுமன்றப் பேச்சுடன் செயல்பட்டு வருவதேன்? முதலாளித்துவப் பாராளுமன்ற மரபிற்கு எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எப்பொழுதும் அரசைக் கண்டித்து, விமர்சனம் செய்யவேண்டியது ஒரு மரபாகும். இதை பெரும் சாதனையாகக் கூட்டணித் தலைமைப் பீடம் கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது.

அதேவேளை ஜனாதிபதியுடனும், உயர்மட்ட அமைச்சர்களுடனும் இரகசிய வழிகளால் கூட்டணித் தலைவர்கள் அடிக்கடி பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றனர். இப்பேச்சுவார்த்தைகள் சிநேகிதபூர்வமானதாகவும், நட்பு நல்லெண்ணத்துடனும் நடத்தப்படுவதாகவும் பேசிக்

(6-ம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் வாபஸ்!

1979 ஆம் வருடம் யூலை மாதத்தில் வடபகுதிக்கு எனப் பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் டிசம்பர் 27 ஆம் திகதியன்று வாபஸ் பெறப்பட்டது. இவ் அவசரகாலச் சட்டம் அமுலிருந்த வேளை பல அத்துமீறல் சம்பவங்கள் இடம்பெற்றதையும், மக்களின் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்படுவதையும் கண்டித்து பல்வேறு அரசியல் கட்சிகளும், சமூக ஸ்தாபனங்களும் குரல்கொடுத்துவந்தன. அவசரகாலச் சட்டத்தை வாபஸ் பெறுமாறும், மக்களின் ஜனநாயக வாழ்வை உறுதிப்படுத்துமாறும் பல்வேறு இயக்கங்கள் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தன. எமது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) அதன் தலைமையிலான தேசபக்த வாலிபர் இயக்கம், நவலங்கா தொழிற்சங்கம் ஆகியன டிசம்பர் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அவசரகாலச் சட்டத்தை வாபஸ் பெறுமாறு கோரி பெரும் கூட்டம் ஒன்றை நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே மக்களினது ஐக்கியப்பட்ட நிர்ப்பந்த இயக்கங்களே அவசரகாலச்சட்டத்தை வாபஸ் பெறச்செய்தது.

## சோவியத் சமூக ஏகாதிபத்தியம் ஆப்கானில் ஆக்கிரமிப்பு

ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து சதிப்புரட்சிகள் மூலம் ஆட்சிமாற்றத்தைச் செய்து தமது பிடியை இறுக்கி வந்த சோவியத் சமூக ஏகாதிபத்தியம் அண்மையில் சதியின் மூலம் அமீன் ஆட்சியைக் கவிழ்த்து -அமீனையும் அவனது ஆட்களையும் தூக்கிலிட்டுள்ளது. அதுமட்டுமன்றி பல்லாயிரக்கணக்கான சோவியத் துருப்புக்களும், டாங்கிகளும் பெருமளவு யுத்த தளபாடங்களும் குவிக்கப்பட்டு, ஆப்கானிஸ்தான் அப்பட்டமாகவே ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன் பதவியில் இருந்த ஆட்சியை சதிப்புரட்சிமூலம் கவிழ்த்துவிட்டு தராக்கி என்பர் ஆட்சியைக் கைப்பற்றினர். தன்னை ஒரு சோஷலிசவாதி எனவும், சோவியத் நண்பனாகவும் கூறிக்கொண்டார். உண்மையில் தராக்கியைப் பதவிக்குக் கொண்டு வந்தவர்கள் சோவியத்சமூக ஏகாதிபத்தியவாதிகளேயாவர். ஆனால் காலப்போக்கில் தராக்கி விடுதலை இயக்கத்திற்கு எதிராக உறுதியாக இல்லாத காரணத்தினாலும், சோவியத்திற்கு அவர்மீது அதிருப்தி ஏற்பட்டதாலும் சில மாதங்களுக்கு முன் தராக்கி ஆட்சி கவிழ்க்கப்பட்டு கொலைசெய்யப்பட்டு அமீன் என்பவர் ஆட்சிபீடத்திற்குக் கொண்டுவரப்பட்டார். இச்சதியையும் சோவியத் ஏஜெண்டுகளே நடத்தி முடித்தனர். அமீன்மீது நம்பிக்கை குறையவே இப்போது அமீனையும் கவிழ்த்து தூக்கிலிட்ட அதேவேளை கர்மல் என்பவனை தமது பொம்மை ஆட்சியின் தலைவனாக்கியுள்ளனர். இச்சதி இடம்பெற்ற அதே கணத்தில் பல்லாயிரம் சோவியத் துருப்புக்களும் - டாங்கிகளும் யுத்த ஆயுதங்களும் குவிக்கப்பட்டுள்ளன. தலைநகரிலும் ஏனைய நகரங்களிலும் குவிக்கப்பட்ட சோவியத்படைகளும் - டாங்கிகளும் இப்பொழுது கிராமப்புறங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஏற்கனவே சக்திமிக்கதாக விளங்கும் ஆப்கான் முஸ்லீம் விடுதலைப் படைகளையும் - மக்களையும் நிர்மூலமாக்குவதே சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் இலக்காக உள்ளது. அது உலகநாடுகளால் கிளப்பப்படும் பலத்த கண்டனங்களுக்கு பதில் கூறுகையில் "ஆப்கானில் உள்ள அந்நிய படைகளை விரட்டவே தாம் படைகளை அனுப்பியுள்ள" தாகக் கூறி முழு உலகையும் முட்டாளாக்க முனைகின்றது. இன்று சோவியத்சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத் தன்மையை முழுஉலகும் மிக வெளிச்சத்தில் கண்டுள்ளது. எனவே உலக மக்களும்-நாடுகளும் சோவியத்சமூக ஏகாதிபத்தியத்தின் ஆப்கானுக்கு எதிரான ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும்—எதிர்க்கும் இயக்கத்தில் நமதுநாட்டு மக்களும் ஒன்றிணைந்து முன் செல்ல வேண்டும். இது மேலாதிக்க வெறிக்கு எதிரானபோராட்டத்தின் நமது அடிப்படையான கடமையாகும்.

## ஆளுங்கட்சிக்குள் நெருக்கடி அரச எம். பீக்கள் அச்சம்!

தற்போதைய யூ.என்.பி. அரசாங்கம் உள்ளாலும் வெளியாலும் பலமான ஒரு அரசாங்கமாக இருப்பதாகக் காட்டிக்கொள்ள பெரு முயற்சி செய்கின்றது. ஆனால் உண்மை அவ்வாறில்லை என்பதையே நிலைமைகள் ஊர்ஜிதம் செய்கின்றன. ஜனவரி மாதத்தில் நடைபெறவுள்ள மந்திரிசபை மாற்றத்தோடு அதன் உள்ளார்ந்த குத்துவெட்டுக்கள் அம்பலத்திற்கு வரும் என்றே நம்பப்படுகின்றது. ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா எல்லோரையும் இணைத்து வைத்திருப்பது போலத் தோன்றினாலும் உள்ளூரப் பெரும் போட்டியும் மோதலும் வளர்ந்துகொண்டே போகின்றன. அநேகமான யூ. என். பி. எம்.பீக்கள் எவ்வாறு தமது எதிர்ப்பைத் தெரிவிக்கலாம் என்பதையிட்டே ஆலோசித்து வருகின்றனர். ஏனெனில் புதிய அரசியல் சாசனமும், ஜனாதிபதிக்கு உள்ள மித மிஞ்சிய அதிகாரமும் தமது பதவிகளைப் பறித்து விடுமோ என்ற அச்சமே அநேக பின்வரிசை எம். பீ.க்களிடையே நிலவுகின்றதாகக் கூறப்படுகின்றது. அதேவேளை மோசமான வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் வெறுப்பும் விரக்தியும் கொண்ட மக்களின் முன்னிலைக்கு அரசாங்க எம். பீ.க்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மந்திரிசபை மாற்றத்தால் பல மந்திரிகள் தமது பதவிகளை இழப்பார்கள். அதேவேளை யூ.என்.பி. கட்சியின் உயர் தலைவர்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

## இன-மொழிக் கோஷங்களால் வர்க்க உறவுகளை மறைக்க முடியாது

## கருத்தும் கண்ணோட்டமும்

# அமிரின் மாக்சிசப் போதனை

## சாத்தான் வேதம் ஓதியது போலுள்ளது!

சாத்தான் வேதம் ஓதியதுபோல் என்ற முதுமொழி மூலம் நாம் விளங்கிக்கொள்வது யாதெனில் வேதத்திற்கும் சாத்தானுக்கும் சம்பந்தமில்லை என்பது மட்டுமன்றி, வேதம் எப்பொழுதும் சாத்தானையே தனது எதிரியாகக் கொண்டது என்பதாகும். சில வாரங்களுக்கு முன்பு வெளிவந்த சுதந்திரன் பத்திரிகையில் தொடர் விஷயமாக திரு. அமிர்தலிங்கம் அவர்களது பேச்சு வெளியாகி இருந்தது. அதாவது இளைஞர் ஆய்வரங்கில் ''தமிழ் ஈழத்தின் சோஷலிசப் பொருளாதாரம்'' பற்றியும் மாக்சிசம் பற்றியும் பேசியிருந்தார். அவரது பேச்சில் குறிப்பிடப்பட்ட விஷயங்களை முழுமையாகப் படித்தபோதுதான் மேற்கூறிய முதுமொழி மிகவும் பொருத்தமானதாகத் தென்பட்டது.

தான் விஞ்ஞான சோஷலிசத்தைப்பற்றி விளக்கிக் கூறுவதாகக் கூறிய அமிர்தலிங்கம் ஒரு முக்கிய கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்தார்; அதாவது ''தமிழ் ஈழத்தில்'' மாக்சிசவாதிகள் கூறும் 'பூர்சுவா வர்க்கம்' இல்லையென்றும், ஆதலால் வர்க்கங்கள் என்ற பிரச்சினை எழவில்லை என்றும் கூறியிருந்தார், அவரது விளக்கத்தின்படி தமிழர்கள் மத்தியில் வர்க்கப் போராட்டம் இருக்க முடியாது என்பதாகும். பாவம் இவருக்கு விஞ்ஞான சோஷலிசத்தின் ஆரம்பவரி கூடத் தெரியாத தனது அறிவீனத்தை இளைஞர்கள் முன்னிலையில் வெளிப்படுத்தியது பரிதாபத்திற்கு உரியதே. பூர்சுவா வர்க்கமும், தொழிலாளி வர்க்கமும் இருந்தால் மட்டுமே வர்க்கப் போராட்டம் இருக்கும் அல்லாவிடில் வர்க்கப் போராட்டம் இருக்க முடியாது என்ற கண்டுபிடிப்பை திரு. அமிர்தலிங்கம் எந்த மாக்சிஸத்தில் படித்தாரோ நாம் அறியோம். ஆனால் விஞ்ஞான சோஷலிசம் கூறுவது என்னவெனில் ''மனித குல வரலாறே வர்க்கப் போராட்டத்தின் வரலாறு என்பதேயாகும். இதை உண்மையான விஞ்ஞான சோஷலிசத்தைப் படித்தவர்களுக்கு மட்டுமே விளங்கிக்கொள்ள முடியும்.

மேலும் திரு. அமிர்தலிங்கம் சீனாவில் இன்றும் நிலங்கள் தனியாரிடம் இருப்பதாகவும், விவசாயம் தனிப் பட்டரீதியில் செய்யப்படுவதாகவும் தலைவர் மாசேதுங் அவர்கள்கூட இந்த முறையை மாற்றி நிலத்தைப் பொதுவுடைமையாக்க முயலவில்லை என்ற பித்தலாட்டக் கதைகளை எல்லாம் இளைஞர் ஆய்வரங்கில் உளறியுள்ளார். சீனாவின் 'விவசாய உற்பத்தியும் அதற்கான பெருந்தொகை நிலங்களும் சீனா (ஒரு விவசாய நாடு) 1949 ஆண்டிற்குப் பின் படிப்படியாகப் பொதுவுடைமை ஆக்கப்பட்டதையும், அதன் உயர்வடிவமாக 'கம்யூன்' என்றழைக்கப்படும் கூட்டு உழைப்பை முதன்மைப்படுத்தும் விவசாய கூட்டுறவு முறை நடைமுறையில் இருப்பதையும் அமிர்தலிங்கம் அறியாது விட்டது அவரது குற்றமேயாகும். 'கம்யூன்' முறை சீனாவில் பெரு வெற்றி பெற்று உற்பத்தியில் சீனமக்கள் தன்னிறைவு பெற்ற சம்பவங்களை நாம் மட்டுமன்றி பல மேற்கத்தைய நிபுணர்களே ஒத்துக்கொண்டதையாவது அமிர்தலிங்கம் கேள்விப்படாதுபோனது அவருக்கும் சோஷலிச எண்ணங்களுக்கும் எவ்வளவு இடைவெளி இருக்கின்றது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

அவர் இளைஞர்களுக்கு அளித்த விளக்கத்தில் ''தமிழ் ஈழத்தில்'' சாதி என்ற முறை மட்டும்தான் பிரச்சினையாக உள்ளது என்றும் அதை மன மாற்றத்தால் மாற்றிவிட்டால் எல்லாம் விஞ்ஞான சோஷலிசமாகிவிடும் என்று அளந்துகட்டியிருக்கிறார். இவ்வாறு விஞ்ஞான சோஷலிசம், மாக்சிசம், போராட்டம்பற்றி எல்லாம் ஏதோ ஏதோ எல்லாம் அமிர்தலிங்கம் பேசியிருக்கிறார். ஆனால் ஒன்றுமட்டும் எம்மால் அறுதியிட்டுக் கூறமுடியும். அதாவது அமிர்தலிங்கத்தைவிட அந்த ஆய்வரங்கில் கலந்துகொண்ட அநேக இளைஞர்களுக்கு விஞ்ஞான சோஷலிசம் பற்றியும் மாக்சிஸம் பற்றியும் சரியாகவும் உண்மையாகவும் தெரிந்திருக்கும் என்பதேயாகும்.

சில மாதங்களுக்கு முன் இளைஞர் பேரவைக்குள் தீவிர இடதுசாரிகள் ஊடுருவிவிட்டனர் எனக்கூறிய திரு. அமிர்தலிங்கம் இன்று இளைஞர்பேரவையைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தபின் அவர்களுக்கு விஞ்ஞான சோஷலிசம்பற்றி விளக்கம் கொடுக்க முற்பட்டால் எப்படி இருக்கும் என்பதே எமது கேள்வி. ஆனால் ஒரு உண்மைமட்டும் புலனாகின்றது. இளைஞர்கள் மத்தியில் புரட்சிகரக்கருத்துக்கள் வேகமாக பரவிவருகின்றன என்பதை உணர்ந்து அதைத் திசைதிருப்பிக் குழப்பியும் — மழுப்பியும் தமது பிற்போக்குத் தலைமையை நிலைநாட்டும் முயற்சியின் ஒரு வெளிப்பாடே திரு. அமிர்தலிங்கத்தின் ஆய்வரங்கு விளக்கமாகும்.

★

### காலியில் யூ. என். பி யின் வெற்றி

நடந்துமுடிந்த காலி இடைத் தேர்தலில் எந்த நோக்கத்திற்காக யூ.என்.பி தனது எதிராளியான தகநாயக்காவைத் தேடிப்பிடித்துத் தனது கட்சி அபேட்சகராக நிறுத்தியதோ அந்த நோக்கம் வெற்றி பெற்றுள்ளது. இதில் யூ. என். பி.க்கு ஒரு ஆத்ம திருப்தி ஏற்பட்டாலும் நாடுமுழுவதிலும் மக்கள் மத்தியில் வளர்ந்துவரும் அதிருப்தியையும், வெறுப்பையும் காலி இடைத்தேர்தல் வெற்றியால் மூடி மறைத்துவிட முடியாது. காலித்தொகுதியில் கிடைத்த வெற்றியின் மூலம் ஏற்கனவே இவ்வெற்றிக்காக ஒத்திவைக்கப்பட்ட மக்களுக்கு எதிரான பல விஷயங்கள் விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளன. விலைவாசி ஏற்றங்கள், போக்குவரத்துக் கட்டண உயர்வு, எண்ணெய் விலை அதிகரிப்பு, இன்னும் எத்தனையோ இரகசியமாக வைக்கப்பட்டுள்ளவை எல்லாம் விரைவில் வெளிவரும் எனறே மக்கள் எதிர்பார்க்கின்றனர். நாம் ஏற்கெனவே கூறியிருந்தது போல் யூ. என்.பி.யின் வெற்றிக்கு இரண்டு ரொட்சீசக் கட்சிகளான சமசமாஜக் கட்சியும், ஜே.வி.பி யும் தமது பங்கைச் செலுத்தியுள்ளதையும் இந்த இடைத்தேர்தலில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ★

### இந்தியத்-தேர்தலும் தமிழக-அரசியலும்

எதிர்வரும் ஜனவரியில் நடைபெறவுள்ள இந்தியத் தேர்தலுக்காக இந்தியப் பாராளுமன்றக் கட்சிகள் பெரும் அமர்க்களப் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளன. தேசியக்கட்சிகள் பல தில்லுமுல்லுகளையும், காலையில் ஒரு கட்சியில் இருப்பவர் மாலையில் மற்றொரு கட்சிக்கு மாறும் செய்திகளும் அடிக்கடி வந்தவண்ண மிருக்கின்கின்றன. கொள்கை கோட்பாடு ஒருபுறமிருக்க வெறும் கதைகள்பேசி மொத்தத்தில் எல்லோருமே இந்திய மக்களை ஏமாற்றுபவர்களாகவே உள்ளனர். அதேவேளை இத்தேர்தல் திருவிழாப் பின்னணியில் சோவியத் — அமெரிக்க வல்லரசுப் போட்டி வேகமாக நடைபெறுகின்றன. அதில் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் மிக வல்லமையுடன் செயல்படுவதாகவே அவதானிகள் கருதுகின்றனர். இதுபற்றி நாம் எமது பத்திரிகையின் ''உலக அரங்கில் அங்கும் இங்கும்'' என்றபகுதியில் காலத்திற்குக் காலம் [illegible] தெளிவாக எடுத்துக் கூறி வந்துள்ளோம். இந்திய முதலாளித்துவ - பிரபுத்துவ ஆளும் வர்க்கமானது தமக்குள் யார் அதிகாரத்தை கைப்பற்றுவது என்பதற்கான [illegible] போட்டியைத்தான் '' ஜனநாயகத் தேர்தல் '' [illegible] பெயரால் நடத்துகின்றனர். தேசியக் கட்சிகளின் தில்லுமுல்லுகளுக்கும், சந்தர்ப்பவாதக் கூட்டுகளுக்கு தாம் எந்தவிதத்திலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை மாநிலக்கட்சிகளாக இயங்கும் தமிழ்நாடு கட்சிகளும் நிலைநிறுத்தி வருகின்றன. எம். ஜீ. ஆர். கட்சி, கருணாநிதி கட்சி, இந்திராகாங்கிரஸ்கட்சி ஜனதாக்கட்சி, திரிபுவாதக் கம்யூனிஸ்ட் கட்சிகள் இவை நடாத்தும் நாடகப்பாணியிலான கூட்டு ஒப்பந்தங்களும் பேச்சுக்களும் இதுதானா தமிழ்நாட்டு அரசியல், இந்நாளைத் தமிழர் தலைவர்களின் அரசியல் சாணக்கியம் என்றே கேட்கத் தோன்றுகின்றது. அந்தளவு தூரத்திற்குப் பித்தலாட்டங்களும் சந்தர்ப்பவாத அரசியல் கூட்டுக்களும் தாண்டவமாடுகின்றன. ஆனால் எல்லோரும் இந்திய மக்களை — அதேபோல் தமிழ்நாடு மக்களை ஏமாற்றுவதில், இதுதான் பாரம்பரிய ஜனநாயக வாழ்வு என்று கூறுவதில் ஒத்தகருத்து உடையவர்களாகவே உள்ளனர். எப்படித்தான் இந்தியத்தேர்தல் நடந்துமுடிந்தாலும் இந்திய மக்களுக்கோ அல்லது தமிழ்நாடுமக்களுக்கோ எவ்வித விமோசனமும் கிடைக்கப் போவதில்லை, ★

## மலையகச் செய்திகள்

### அடக்கப்படுவர்கள் காலமெலாம் அடங்கமாட்டார்கள்

''ஜனநாயகப்'' பாதையில் இலங்கை சென்றுகொண்டிருக்கும் இவ்வேளையிலும் பிரபுத்துவத்திற்குரிய அடக்குமுறைகள் இன்றும் இல்லாமலில்லை.

குறிப்பாக ஈட்டன் (ETON) என்ற தேயிலைத் தோட்டத்தின் உரிமையாளரும், நிர்வகிப்பவரும், அவசரத்திற்கேற்ப கங்காணியாகவும், அவதாரம் எடுக்கும் அவர் அதே தோட்டத்தில் பெரிய கடை ஒன்றையும் நிறுவியுள்ளார். ஏனெனில் இத்தோட்டத்திலிருந்து கடை வீதிக்கு நீண்டதூரமே ஆகும். ஆனால் மக்கள் கடைவீதிக்குச் சென்று தான் விரும்பிய பொருளை வாங்கக்கூடாது, எதுவேண்டுமானாலும் அவருடைய கடையிலே அதியுயர்ந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். இந்த தோட்டத்தில் அரிசியையே கண்ணால் காணாத எத்தனையோ குடும்பங்கள் இன்று வாழ்கின்றன. மேலும் அவருடைய கடையில் பொருட்கள் வாங்கினால் தொழிலாளருக்கு அந்த மாதச் சம்பளம் கிடைப்பது அரிது. ஆனால் கடன் இருக்கலாம். சாதாரண விலைக்கு விற்கும் அரிசி கூட உயர்விலைக்கு விற்கப்படுகிறது. அன்றாடம் இங்கிருந்து அனேக குடும்பங்கள் வெளியேறுகின்றன; குடியேறுகின்றன. ஆனால் இவற்றிற்கு போனசோ, சேவைப்பணமோ எதுவுமே கிடையாது. காலை ஆறுமணி முதல் மாலை ஆறு மணிவரை மக்கள் உழைக்க வேண்டும்: இல்லையெனில் அன்று அவர்கள் வேலை செய்தவர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

மேலும் இங்கு தொழிற்சங்கம் ஒன்றை நிறுவ அனுமதி கிடையாது. மீறினால் அவர் உடன் வெளியேற்றப் படுவார். இல்லையேல் அடித்து விரட்டப்படுவார்; தான் விரும்பிய திகதியில் சம்பளம் கொடுப்பார். மற்றும் இங்கு இன்றைய தேயிலைத் தொழிலாளருக்கு வழங்கப்படும் சம்பளத்தைவிட மிகக் குறைவானதாகும். இத்தோட்ட உரிமையாளரானவர் யார் தெரியுமா? மலையகத்தந்தை-தொண்டு மனிதன் - தனிப் பெருந் தலைவன் என்றெல்லாம் வருணிக்கப்படும் ஒரு அமைச்சரின் பேரன் என்பதும் ஈண்டு இங்கு குறித்துக் காட்டக்கூடிய தொன்றாகும்.

இத்தகைய அடக்குமுறை என்பதும் காலமெல்லாம் செயற்படுத்தக் கூடிய ஒரு சாதனமல்ல, வெகுவிரைவில் மக்கள் கிளர்ந்து அடக்குமுறைக்கு எதிராக புரட்சிக் கொடியைத் தாங்குவார்கள் என்பது திண்ணம்.

★

### குடும்பக் கட்டுப்பாடு

இலங்கையில் அண்மைக் காலமாக குடும்பக்கட்டுப்பாட்டினை வலியுறுத்தப்படுவதினை யாளரும் அறிவோம. ஆனால் எந்த ஒரு பொருளாதாரத் திட்டத்தற்கும் இல்லாத ''திட்டமிடல்'' குடும்பக்கட்டுப்பாட்டினை மலையகத்தில் நடைமுறைப் படுத்துவதில் காணப்படுகின்றது.

மலையகத் தொழிலாளர்களை பலவீனப்படுத்தி பலாத்காரமாக கருத்தடைச் சிட்சையினை மேற்கொள்ளுகின்றனர். அதாவது மாத இறுதியில் மக்களிடையே பணத் தட்டுப்பாடு ஏற்படும்போது தீபாவளி பொங்கலுக்கென ஒரு தொகைப் பணத்தைக் கண்ட மக்களை உடன் 250 ரூபா தருவதாக கையொப்பத்தினைப் பெற்றுக்கொண்டு கருத்தடைச் சத்திரசிகிச்சையினைச் செய்ய முற்படுகின்றனர். இது பெரும்பான்மையான மலையக மக்களுக்குப் பீதியை ஏற்படுத்திவருகின்றது.

கருத்தடை, இலங்கைக் குடும்பத்திட்டச் சங்கத்தின் 1979 முதல் மூன்று நான்கு ஆண்டுகளில் மலையகத்தில் தொழிலாளரில் ஆகக்கூடிய தொகையினருக்கு கருத்தடை சத்திரசிகிச்சை செய்வதென ஒரு மறைமுகச் சதியின் அமுலாக்கமே மேற்கூறிய கருத்தடை முறையாகும் எனவே பலாத்காரமாக மக்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கருத்தடை செய்வதை வைத்தியர்கள் உடன் நிறுத்தவேண்டும்.

இவ்வாறு அரசு வேறு எப்பிரதேசத்திலும் இல்லாத அளவுக்கு கருத்தடை செய்வதினை மலையகத்தில் திட்டமிட்ட முறையில் அமுல்நடத்துவதன் முக்கிய நோக்கம் இலங்கையில் பெருகிவரும் சனத்தொகையை பொருளாதார முன்னேற்றத்திற்காகத் தடுப்பது என்று கூறமுடியாது. ஏனெனில் அவ்வாறு இலங்கையில் பயன்படுத்த முடியாத வளம் என்று எதுவுமில்லை. எனவே இவ்வாறு செய்யப்படுவதன் பின்னணி நோக்கம் மலையகத்தில் பெருகிவரும் தொழிலாளி வர்க்கத்தினைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இலங்கையில் ஏற்படப்போகும் ஒரு புரட்சியை ஒத்திப்போடல், மேலும் பெரும்பான்மையினரையும் சிறுபான்மையினரையும் சமப்படுத்தவே குடும்பக் கட்டுப்பாடு என்று கூறி ஒரு சிறுபான்மை இனத்தை மேலும் சிறுபான்மையாக ஆக்கப்படுவதே ஆகும். இதற்கு

(6-ம் பக்கம் பார்க்க)

தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்கு மாக்சிசத் தத்துவத்தால் மட்டுமே வழிகாட்டமுடியும்

# மாக்சிசப் பார்வையில் "மனித உரிமைகள்"

## "மனிதஉரிமைகள் என்பது முதலாளித்துவக் கோஷம்!

வருடாவருடம் ஐ. நா. நாடுகள் சபையின் மனித உரிமைகள் தினம் உலகின் பல நாடுகளில் நினைவுபடுத்தப்படுகின்றது. எனவே மனித உரிமைகள்பற்றிய கம்யூனிஸ்டுக்களின் கண்ணோட்டம் என்ன என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது. இக்கட்டுரை 'பீக்கிங் றிவியூ' சஞ்சிகையில் வெளிவந்தது. அக்கட்டுரையின் முக்கிய பகுதிகளைச் சுருக்கித் தந்துள்ளோம்.

—[ஆசிரியர் குழு]

சமகால சர்வதேச அரசியல் நடவடிக்கைகளில் மனித உரிமைகள் பற்றிய விடயம் ஒரு முக்கிய பிரச்சினையாகக் கருதப்பட்டு வருகிறது. மாக்சிச நிலைப்பாட்டிலிருந்து சரித்திரரீதியான ஆய்வொன்றை மேற்கொள்வதன் மூலமே நாம் இந்த விடயத்தை எவ்வாறு அணுகவேண்டும் என்பதற்கு தகுந்த முடிவுகளை எடுத்துக்கொள்ளலாம்.

### சரித்திர ரீதியான விளைவு

சரித்திரரீதியாகப் பார்த்தால் முதல் முதலாக மனித உரிமைகள் என்ற கோஷத்தை முன்வைத்தவர்கள் பூர்சுவாக்களேயாகும். ''மனிதனின் இயற்கையான உரிமைகள்'' என்ற கோட்பாட்டிலிருந்து இதன் தத்துவார்த்த அடிப்படை பெறப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் இது ஒரு புரட்சிகரத் தன்மையைக் கொண்டிருந்தது. ஏனெனில் பிரபுத்துவ முடிமன்னர்களின் எதேச்சாதிகாரத்தைத் திட்டவட்டமாக இது நிராகரித்ததுடன் சகலதும் இறைவனுக்காகவே; மனிதன் சகலத்தையும் இறைவனுக்கு அர்ப்பணித்தல் வேண்டும் என்ற மதக் கூற்றையும் காறித்துப்பி நிராகரித்தது.

பிரபுத்துவத்திற்கு எதிரான புரட்சியில் வளர்ந்து கொண்டிருந்த பூர்சுவாக்களுக்கு ''மனிதனின் இயற்கையான உரிமைகள்'' என்ற தத்துவம் ஒரு பலம்மிக்க ஆயுதமாக விளங்கியது. மனித உரிமைகள் அவர்களது பிரதான கோஷமாகவும் பூர்சுவா அரசியல் வேலைத்திட்டத்தில் அடிப்படை அம்சமாகவும் விளங்கியது.

பூர்சுவாக்களால் முன்வைக்கப்படும் மனித உரிமைகள் சகலருக்குமானதுபோல் தோற்றமளித்தாலும் சாராம்சத்தில் அது பூர்சுவாக்களுக்கான உரிமைகள் மட்டுமே. முதலாளித்துவ சமுதாயத்தில் பூர்சுவாக்கள் உற்பத்தி சாதனங்களை உடைமைகொண்டிருப்பதால் அதற்குப் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டி அடிமைப்படுத்தும் உரிமையைக் கொண்டிருக்கிறது. அதே சமயம் பாட்டாளி வர்க்கத்திடம் உற்பத்திச் சாதனங்கள் இல்லாதபடியால் அவர்கள் தமது சொந்த உழைப்பைச் சுதந்திரமாக சமத்துவமான முறையில் விற்பதற்கு மட்டுமே உரிமை கொண்டுள்ளனர்.

### சமகால சர்வதேச- அரசியற் போராட்டத்தில் ஓர் ஆயுதம்

பூர்சுவா அரசியலமைப்புச் சட்டங்களில் மனித உரிமைகளைப் பிரசைகளின் உரிமைகள் என எழுதி வைத்திருந்தாலும் முதலாளித்துவ சமுதாயத்தின் நிஜவாழ்வில் பூர்சுவாக்களே முழுமையான மனித உரிமைகளை அனுபவிக்கின்றார்கள்.

கடந்த இருநூறு, முன்னூறு வருடங்களாக பூர்சுவாக்களால் முன்வைக்கப்பட்ட மனித உரிமைகள் சுலோகமானது முதலாளித்துவ நாடுகளில் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது சர்வதேச அரசியற் போராட்டத்தில் மனித உரிமைகள் ஓர் ஆயுதமாகவும் - சர்வதேச சட்டத்தில் ஓர் அளவு கோலாகவும் கருதப்பட்டது.

இரண்டாவது உலகயுத்தத்தின்போது ஜேர்மன், இத்தாலிய, யப்பானிய பாசிசவாதிகளால் மனித சமுதாயத்திற்கு சொல்லொண்ணா அட்டூழியங்கள் செய்யப்பட்டது. இது உலகம் பூராவும் உள்ள மக்களைப் பெரும் ஆத்திரத்திற்குள்ளாக்கியதால் அவர்கள் மனித உரிமைகளைப் பாதுகாக்க பெருமளவில் வேண்டுகோள் விடுத்தனர். ஐக்கியநாடுகள் சாசனத்தில் மனித உரிமைகள் சரத்துக்களாக இருப்பவை மக்களின் இந்தக் கோரிக்கைகளினதும் அபிலாசைகளினதும் வெளிப்பாடாகும்.

### மாற்றம் வேண்டும்

அண்மைக்கால ஆண்டுகளில் பல மூன்றாம் உலக நாடுகள் மனித உரிமைகள் சம்பந்தமான எண்ணக்கருத்தை வியாக்கியானம் செய்வதில் ஏகபோகம் கொண்டிருப்பதையும், மனித உரிமைகள் சம்பந்தமாக ஐ.நா. நடவடிக்கைகள் ஐரோப்பியத் தரத்தைக் கொண்டிருப்பதையும், அவை எதிர்க்கின்றன. மனித உரிமைகள் என்பன தனிநபர்களின் அடிப்படைச் சுதந்திரங்கள் மட்டுமல்லாமல் தேசங்களின் உரிமைகளையும் உள்ளடக்கின்றன எனவும்; மனித உரிமைகள் என்பன அரசியல் உரிமைகள் மட்டுமல்லாமல் சமூகபொருளாதார கலாச்சார உரிமைகளையும் குறிக்கின்றன எனவும் கூறுகின்றன.

ஒரு தேசம் அந்தப் பிராந்தியத்திலோ அல்லது உலகம் தழுவியதாகவோ ஏனைய தேசங்களை அடக்குவதற்காக மேலாதிக்க கொள்கையைக் கடைப்பிடிக்குமானால் அது தவிர்க்க முடியாமலே தனது சொந்த மக்களையும் அடக்கியாளும். மக்களின் உரிமைகள் பெருமளவில் மீறப்படும் பட்சத்தில் பெரும் எண்ணிக்கையில் அது அகதிகளை உருவாக்கும். பல்லாயிரக்கணக்கானோர் நடுக்கடலில் இறப்பதற்கு வழிவகுத்த தற்போதைய இந்தோசீன அகதிகள் பிரச்சினையானது பெருமளவில் மனித உரிமைகள் மீறலுக்கு ஓர் உதாரணமாக விளங்குகிறது.

### முதலாளித்துவத்தின் ஒரு கேடயம்

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், சோஷலிச அமைப்பையும் எதிர்ப்பதற்காக ஏகாதிபத்தியமும், பூர்சுவாக்களும் ''மனித உரிமைகள்'' என்ற கோஷத்தை முன்வைக்கின்றனர். ஆனால் பழைய சீனாவில் ஷாங்காய் நகரின் ஒரு பூங்காவில் ''நாய்களும் சீனர்களும் உள்ளே செல்ல அனுமதி இல்லை'' என்று அறிவிப்புப் பலகை தொங்கப்பட்டிருந்ததை சீன மக்கள் இன்றும் நினைவில் வைத்திருக்கிறார்கள்- அந்நிய ஆட்சியாளர் எவ்வாறு சீனமக்களின் அடிப்படை உரிமைகளைக் காலிற்போட்டு மிதித்து ஆட்சி நடாத்தினார்கள் என்பதை நாம் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளோம், சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் சீனமக்கள் தமது நாட்டிலிருந்து ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், பெருமுதலாளித்துவம் என்பவற்றைத் தூக்கியெறிந்த பின்னரே தமது அடிப்படை உரிமைகளைப் பெற்றார்கள்.

தற்போது சீனாவில் மனித உரிமைகள்பற்றி ஏகாதிபத்தியவாதிகள் ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டனர். மனித உரிமைகளைப்பற்றி வெவ்வேறுகோணத்திலிருந்து விளக்கம், வியாக்கியானம் கொடுக்கலாம்.

### பாட்டாளி வர்க்கத்தின் பிரதான கோஷம் வர்க்கங்களை ஒழிப்பதே

மனித உரிமைகள் தொடர்பாக பாட்டாளி வர்க்கம் என்ன அணுகு முறையைக் கொண்டுள்ளது.

தனிச் சொத்தை ஒழிப்பதும், வர்க்கங்களை ஒழிப்பதும் முழுமனித சமுதாயத்தையும் மீட்சி செய்து, கம்யூனிசத்தை அடைதலுமே அடிப்படையான மனித உரிமைகள் என மார்க்ஸ் அவர்கள் கருதினார். கம்யூனிஸ்ட் அறிக்கையில் மனித உரிமைகள் கோஷத்தைக் குறிப்பிடாதது ஏதோ தற்செயலானது அல்ல, தவறும் அல்ல. பாட்டாளி வர்க்கத்தின் சரித்திரக்கடமை மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழித்து மனிதசமுதாயத்தை பூரணமாக விடுதலை செய்வதாகும். கம்யூனிஸ்ட் அறிக்கையில் இந்தக்கருத்தை மாக்சும், ஏங்கல்சும் தெளிவாக விளக்குகையில் ''கம்யூனிஸ்ட்டுக்களின் கோட்பாட்டை— தனியுடமையை ஒழிப்பது— என்ற ஒரு வசனத்தில் சுருக்கமாகக் கூறலாம்'' எனத் தெரிவித்திருந்தனர். பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படைக்கோஷம் வர்க்கங்களை ஒழிப்பதாகும்.

அப்படியானால் பாட்டாளி வர்க்கம் மனித உரிமைகள் கோஷத்தை எழுப்பக்கூடாது என்பது அர்த்தமல்ல. இதை நடைமுறைப்படுத்துமாறு பாட்டாளி வர்க்கம் பூர்சுவாக்களிடம் கோரவேண்டும். இந்தக் கோஷத்தைப் பூர்சுவாக்களுக்கு எதிராக அவர்கள் ஓர் ஆயுதமாக உபயோகிக்க வேண்டும்.

எவ்வாறாயினும் சுதந்திர சமத்துவம் என்பதெல்லாம் ''வெறும் ஜனநாயகக்கோரிக்கைகள்'' என ஏங்கெல்ஸ் தெளிவுபடுத்தியுள்ளதுடன் பாட்டாளிவர்க்கம் தன்னை இந்தக் கோஷங்களுக்குள்ளும் கோரிக்கைகளுக்குள்ளும் மட்டுப்படுத்திவிடக் கூடாதென்றார். அது தனது உயர்ந்த கோரிக்கையும் இலட்சியமுமான சோஷலிசம் - கம்யூனிசத்தை அடைய வேண்டும். இந்த இலக்கிலிருந்து விடுபடும் எந்த மனித உரிமை என்ற கோஷமும் ஏமாற்றானது.

கம்யூனிசத்தை அடைந்த பின்னரே சமுதாயத்தின் சகல மக்களுக்கும் போதிய பொருள்கள் உத்தரவாதப் படுத்தப்படுவதுடன் உண்மையான சமத்துவமும் நிலைநிறுத்தப்படும். அதன்பின்பே மனிதனுடைய சக்தியும் திறமையும் முழுமையாகவும் சுதந்திரமாகவும் வளர்த்தெடுக்கப்படுதுடன் உபயோகிக்கவும் முடியும். அதன்பின்பே மனிதன் இயற்கையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பான். எனவே ஒப்பீட்டளவில் ஒரு வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தைக்கொண்டிராவிட்டால் ஒவ்வொரு பிரஜையும் வேலை செய்வது, ஓய்வெடுத்துக் கொள்வது என்ற உரிமைகளையும் ஏனைய பொருளாதார உரிமைகளையும் நலன்களையும் முழுமையாக அனுபவிப்பது கஷ்டமாயிருக்கும். ஒரு தேவையான கலாச்சரத்தைக் கொண்டிராவிட்டால் பிரஜை ஒருவன் வெவ்வேறு வகைப்பட்ட கலாச்சார வளர்ச்சியோடு ஒட்டித்தான் பிரஜைகளின் உரிமைகள் மேலும் மேலும் அனுபவிக்க முடியும்.

## உண்மையான சோஷலிசத்தில் ஒரு
# சிறுபான்மைஇனம்

சீனாவின் வட கிழக்கில் உள்ள ஹெய்லோங்சியாங் மாகாணத்தில் ''கேஸ்சி'' என்றழைக்கப்படும் சிறுபான்மை இன மக்கள் வாழ்ந்து வந்தனர். விடுதலைக்கு முன் இவ் இனத்தின் மொத்த எண்ணிக்கை 300க்குச் சற்று கூடுதலேயாகும். அன்று இவர்களது மொழிக்கு எழுத்து வடிவம்கூட இருக்கவில்லை. மீன்பிடிக்கும் தொழில் மட்டும் செய்துவந்த 'கேஸ்கி' இனமக்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே விடப்பட்டனர். ஆனால் சீனப்புரட்சி சீனாவின் சகல தேசிய சிறுபான்மை இனங்களை விடுதலை செய்ததுபோல் மிக எண்ணிக்கையில் குறைந்த கேஸ்கி இனமக்களையும் விடுதலை செய்தது. சீனாவின் அரசியல் சாசனம் எடுத்துக்கூறும் ''சகல இனங்களும் சமமானவை'' என்பதை சோஷலிச அமைப்பின்கீழ் உண்மையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதற்கு இக்'கேஸ்கி' இன மக்கள் சிறந்த உதாரணமாகும்.

இன்று 800 பேர்களைக் கொண்ட இந்த இன மக்கள் கல்வியிலும் - உற்பத்தியிலும் அரசியலிலும் ஏனைய சகல உரிமைகளையும் அனுபவிக்கின்றனர், சீனமக்கள் காங்கிரசில் இரண்டு இலட்சம் பேர்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற வரையறைகூட, எண்ணிக்கையில் 800 பேர்களை மட்டும் கொண்ட இந்த இனத்திற்கு உண்மையான ஜனநாயரீதியில் பிரதிநிதித்துவமளித்து ஒரு பிரதிநிதித்துவத்தைக் கொடுத்துள்ளார்கள். மீன்பிடித்தொழில் மட்டும் செய்துவந்த கேஸ்சி இன மக்கள் இன்று மூன்று உற்பத்தி பிரிகேடுகளை உருவாக்கி விவசாய உற்பத்தியில் முன்னேறி இருக்கிறார்கள். கல்வியறிவு இல்லாத நிலையிலிருந்த இம்மக்கள் மத்தியிலிருந்து பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் உருவாக்கப்பட்டுள்ளனர். சகலதுறைகளிலும் இந்த இன மக்கள் எவ்வித பாரபட்சமும் இன்றி நடத்தப்படுகின்றனர். இவர்கள் மத்தியில் குடும்பக் கட்டுப்பாடுகள் பற்றியதான பிரசாரமும் மேற்கொள்ளப்படுவதில்லை. தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான உண்மையான சோஷலிச அமைப்பின்கீழ் மிகச் சிறிய சிறுபான்மை இனம் எவ்வாறு பாதுகாக்கப்பட்டு - வளர்க்கப்பட்டு முன்னேற்றப்படுகின்றது என்பதற்கு கேஸ்கி இனத்தின் நிலை சிறந்த உதாரணமாகும்.

சீனாவின் மிகப்பெரிய எண்ணிக்கையைக்கொண்ட ஹான் இனத்துடன் கேய்கி இனத்தை ஒப்பிடுகையில் மிகமிகச் சிறிய ஒரு தொகையேயாகும். அப்படி இருந்தபோதிலும் சோஷலிச அமைப்பானது சகல இனங்களும் சமமானவை என்பதையே சொல்லிலும் செயலிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுபான்மை இனங்கள் வாழும் சீனாவில் இனங்கள் மத்தியிலான பிரச்சினைகள் யாவற்றையும் மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைத் தீர்க்கும் முறையின் அடிப்படையில் அணுகி மிகவும் கவனத்துடன் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும்—அரசும் நடந்துகொள்கின்றார்கள். இதனால் தேசிய ஐக்கியமும், தேச ஒருமைப்பாடும் வளர்க்கப்பட்டு சோஷலிசப் புரட்சியிலும், சோஷலிச நிர்மாணத்திலும், சகல தேசிய சிறுபான்மை இனங்களும் முழுமூச்சுடன் செயலாற்றுவதையே இன்று சீனாவில் காணமுடிகின்றது.

**தனிச்சொத்துடைமையை ஒழித்தால்மட்டுமே உண்மையான மனிதஉரிமைகளை நிலைநாட்டமுடியும்**

# பயங்கரவாதம் மக்களுக்கும் மார்க்சீசத்திற்கும் விரோதமானது

இன்று தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிப் பரவலாகப் பேசப்படுகின்றது. ஆதலால் பயங்கரவாதத்தின் உண்மைத் தன்மைபற்றி மார்க்சிசவாதிகளாகிய நாம் என்ன கண்ணோட்டம் கொண்டிருக்கின்றோம் என்பதை விளக்குவது அவசியமாகிறது.

எமது கண்ணோட்டத்தில் பயங்கரவாதம் என்பது இரண்டு பிரிவினரால் இன்று உலகம் பூராவும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்ப மறுக்கும் அல்லது அவர்களுக்கு எதிராக அணிதிரளும் மக்களுக்கு எதிராகத் தமது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுகின்றனர் ஆனல் இத்தகைய பகுதியினர் எவராவது தாம் நிராயுதபாணிகளான மக்களுக்கு எதிராகப் பயங்கரவாத நடவடிக்கைகளைச் செய்வதாக ஒப்புக்கொள்வதில்லை. சட்டம், ஒழுங்கு ஜனநாயகம், தார்மீகம் இவற்றைப் பாதுகாப்பதாக மட்டுமே கூறிக் கொள்வர். இந்த ஆளும் வர்க்கத்தினரும் அதிகார சக்

## ஏகாதிபத்திய - சமூக ஏகாதிபத்திய முதலாளித்துவபிற்போக்குசக்திகளே முதல்தரமான பயங்கரவாதிகள்!

தைக் காண முடிகின்றது. அதாவது ஏகாதிபத்தியவாதிகள் சமூகஏகாதிபத்தியவாதிகள், காலனியாதிக்கவாதிகள் இனவெறி ஆட்சிவாதிகள், சியோனிசவாதிகள், ஒவ்வொரு நாடுகளின் ஆளும் வர்க்கமாகத் திகழக்கூடிய சொத்துடைய ஆளும் வர்க்கத்தினர் ஆகியோர் முதல் பிரிவிலே அடங்குவர். இத்தகைய சக்திகள் பலலட்சம், பலகோடி மக்களை தமது திட்டமிட்ட ஒழுங்குபடுத்தப் பட்ட படைபலத்தின்மூலம் அடக்கி ஆளுகின்றனர். அவர்களது ஆட்சிக்கு அடங்க திகளும் தமது கேவலமான நடவடிக்கைகளுக்கு சட்ட அங்கீகாரமும், பொய் நியாயங்களையுமே எடுத்துக் கூறுவர். இவர்களது கைகளில் அரசு இயந்திரமும் - ஆயுதப் படைகளும் சட்டரீதியில் (முதலாளித்துவச் சட்ட அமைப்பின்படி) இருப்பதனுல் மிகக் காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத நடவடிக்கைகளை மக்களின் மேல் மேற்கொண்டு வந்ததையும் இன்றும் அது தொடர்வதையுமே காண முடிகின்றது. இன்று மேலாதிக்க வல்லரசுகளான சோவியத் சமூக ஏகாதிபத்தியவாதிகளும் - அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும், இஸ்ரேல் சியோனிசவாதிகளும், ஆபிரிக்க இனவெறி ஆட்சியாளர்களும். ஏனைய நாடுகளின் முதலாளித்துவப் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களும் நாளாந்தம் மக்களின்மீது நடத்தி வரும் பயங்கரவாதத்தைவிட மேலான பயங்கரவாத நடவடிக்கைகள் உலகில் வேறு இருக்க முடியாது. ஆனல் பயங்கரவாதம் தேசிய-சர்வதேசிய ரீதியில் ஒழிக்கப்படல் வேண்டும் என்று ஓலமிட்டுக் கத்தும் பேர்வழிகளும் மேற்கூறிய ஆசாமிகளேயாவர். இவர்கள் இவ்வாறு உரத்துக் கத்துவதன்மூலம் மக்களுக்கு எதிரான தமது பயங்கரவாத நடவடிக்கைகளை மூடிமறைக்க விரும்புகின்றனர். உதாரணமாகக் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இஸ்ரேலிய சியோனிசவாதிகளும் ஏகாதிபத்தியவாதிகளும்- பலஸ்தீன மக்களுக்கும் - அரபு நாடுகளின் மக்களுக்கும் எதிராக இழைத்த பயங்கரவாத கொடுமைகள் பற்றி பிற்போககுவாதிகள் மௌனம் சாதிக்கின்றனர். அல்லது நியாயம் கற்பிக்கின்றனர். அதே வேளை பலஸ்தீன மக்கள் அதை எதிர்த்து ஏதாவது செய்துவிட்டால் பயங்கரவாதம் எனப் பதறி அடித்து பெரும் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர். எனவே மேற்கூறிய முதல் பிரிவினரின் பயங்கரவாத நடவடிக்கைகளையே மாக்சிசவாதிகளாகிய நாம் மிகப்பெரிய முதலாம் தரப் பயங்கரவாதம் என அறுதியிட்டுக் கூறுகின்றோம்.

பயங்கரவாதத்தை நடைமுறைப்படுத்தும் இரண்டாம் பிரிவினர் மேற்கூறிய முதலாம் பிரிவினரை எதிர்ப்பதற்குச் சிறுச்சிறு குழுக்களாக ஒன்றிணைந்து ஒரு குறிப்பிட்ட சிலருக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகும். சில வீரதீரச் செயல்களைச் செய்யக்கூடிய ஒரு சிலரை ஒன்

### நமது அரசியல் நிருபர்

றிணைத்தே மேற்படி பயங்கரவாத நடவடிக்கைகள் செய்யப்படுகின்றன. அடக்குமுறைக்கு எதிரானது, விடுதலை, சுதந்திரத்திற்கானது என்று கூறப்பட்டாலும்கூட இவ்விதமான பயங்கரவாத நடவடிக்கைகள் பலன்தர முடியாதவை என்பதையே வரலாறு எடுத்துக்காட்டி வந்துள்ளது. முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதத் தலைவர்களையோ அல்லது அதன் பாதுகாவலர்களையோ தனிப்பட்டரீதியில் இல்லாது ஒழிப்பதன்மூலம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. ஜார் எதேச்சதிகார ரஷ்யாவிலே இரண்டாவது அலெக்சாண்டர் பயங்கரவாத குழுவின் குழுக்களால் ஐரிஷ் மக்களை விடுதலைசெய்ய முடியவில்லை. மேற்கூறிய இரண்டு உதாரணங்கள் மூலமும் எதேச்சதிகாரத்திற்கும் அடக்குமுறைக்கும் எதிரான தனிநபர் பயங்கரவாதம் என்பது ஒருபோதும் வெற்றிபெற்று மக்களின் அடிப்படையான விடுதலையைத் தேடிக்கொள்ள முடியாத ஒன்றே என்று காண முடிகின்றது. இவ்விதமான பயங்கரவாத நடவடிக்கைகள் சிலவேளைகளில் இளைஞர்களுககோ அல்லது அடக்கப்படும் மக்களுக்கோ கவர்ச்சியானதாக, வீரதீரச் செயல் போலத் தோன்றக்கூடும். ஆனல் அவ்வித நடவடிக்கைகள் மக்களைத்தான் கூடுதலாக பாதிக்கும் என்பதையே நடைமுறை அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. தனிநபர் பயங்கரவாதம் என்பது ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களை வர்க்க ரீதியில் சிந்திப்பதையும், வர்க்கப்போராட்டத்தை முன்னெடுப்பதையும் முழு முதலாளித்துவ அமைப்பை மாற்றி அமைக்கும் போராட்டப் பாதையையும் மறைக்கின்றது. ஒவ்வொரு நாட்டினதும் உழைக்கும் மக்கள் தமக்கு இழைக்கப்படும் பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிராகவும், அரசியல் அடக்கு முறைகளுக்கு எதிராகவும் இன்றையகாலகட்டத்தில் மிகவும்முன்னேறிய வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் அரசியல் ரீதியில் அணிதிரண்டு புரட்சிகரப் போராட்டங்களை முன்னெடுப்பதையும் இத் தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகள் பின்தள்ளுகின்றன. இதுமட்டுமன்றி ஏகாதிபத்திய பிற்போக்கு ஆளும் வர்க்கத்திற்கெதிரான தொழிலாளி வர்க்கத்தினதும், உழைக்கும் மக்களினதும் புரட்சிகரப் போராட்டங்களையும் பயங்கரவாதம் என்ற பெயர் சூட்டி மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி பிற்போக்குவாதிகளுக்கு இத்தனிநபர்வாதம் எதிர்மறையாக உதவிசெய்கின்றது எனவே

## பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தால் முறியடிக்க முடியாது!

வின் எறிகுண்டினல் கொல்லபபட்டபோதிலும் ரஷ்யாவில் எதேச்சாதிகாரம் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்ட காரணத்தினுல் தனது சகோதரனை தூக்குமேடையில் இழந்த தோழர் லெனின் அவர்கள்கூட விரக்தியடைந்து தானும் பயங்கரவாதத்திற்கு செல்வதற்கு முயலவில்லை. அதற்குப் பதிலாகத் தொழிலாளி வர்க்கப் புரட்சியை வழிநடத்தி வெற்றி காண்பதிலேயே முழுமூச்சாக ஈடுபட்டார். இறுதியில் வெற்றியும் பெற்றார். அதேவேளை கடந்த நூறு வருடங்களுக்கு மேல் ஐரிஷ் மக்களை அடக்கி ஆண்டுவரும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் எவ்வளவுதான் மக்களுக்குச் சார்பான அல்லது இனத்திற்குச் சார்யான நடவடிக்கைகள் என்று கூறப்பட்டாலும் தனிநபர் பயங்கரவாதம் என்பது அடிப்படையில் மக்களுக்கு மட்டுமன்றி மாக்சிசத்திற்கும் விரோதமானதேயாகும். எந்தவொரு உண்மையான மாக்சிசவாதியும் தனிநபர பயங்கரவாத நடவடிக்கைகளை — அவை எவ்வளவு வீரதீரமானதாக இருந்தபோதிலும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும் அதேவேளை தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஏகாதிபத்தியத்திற்கும் அதன் ஏவல் நாய்களுக்கும் அல்லது ஒவ்வொரு நாடுகளின் ஆளும் வர்க்கத்திற்கு எதிராக நடத்தும் புரட்சிகர பலாத்காரத்தை ஒருபோதும் தனிநபர்

2-ம் பக்கம் பார்க்க

# தோழர் ஸ்டாலின் அவர்கள்

## பாட்டாளி வர்க்கத்தின் மகத்தான தலைவர்

மாபெரும் தலைவனும் தோழர் லெனினுக்குப்பின் ரஷ்யப் பாட்டாளிவர்க்கத்தினதும், உலகப் பாட்டாளி வர்க்கத்தினதும் நம்பிக்கைக்குரிய தலைவனுகத் திகழ்ந்து வழிகாட்டிய தோழர் ஸ்டாலின் அவர்களின் நூறுவது பிறந்த தினம் இம்மாதம் இருபத்தியோராம் திகதியாகும். தோழர் ஸ்டாலின் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதையும் ரஷ்யப் பாட்டாளி வர்க்கத்திற்கும் ஏனைய உழைக்கும் மக்களுக்கும் அதேபோல் உலக மக்களுக்குமாக அர்ப்பணித்த ஒருமாபெரும் புரட்சிவாதியாவர். அவரது மதிநுட்பம் கொண்ட தத்துவார்த்த -- அரசியல் — பொருளாதார — இராணுவத் தலைமையானது ரஷ்ய மக்களின் சோஷலிச நிர்மாணத்திற்கும் சோஷலிசப் புரட்சிக்கும் வழிகாட்டி நின்றது. ஒக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றிபெற்று ஒருசில ஆண்டுகளில் தோழர் லெனின் அவர்கள் இறந்துவிட்டார். ஆதலால் தோழர் லெனின் அவர்கள் விட்டுச்சென்ற மாபெரும் பணியை மிகவும் நெருக்கடிகளும்-கஷ்டங்களும் நிறைந்த சூழ்நிலைகளின் மத்தியில் தோழர் ஸ்டாலின் அவர்கள் நம்பிக்கையுடன் முன்னெடுத்தார். தோழர் லெனின் அவர்களால் விட்டுச்செல்லப்பட்ட 'லெனினிசம்' என்ற தத்துவ அடிப்படையில் மிகவும் உறுதியாக நின்று தோழர் ஸ்டாலின் செயல்பட்டார், அதன் மூலமே அவர் புகழ் மிக்க போல்ஷிவிக் கட்சியை ரொட்சிஸ்கியினதும், அவனது கையாட்களிடம் இருந்தும் பாதுகாத்து தொடர்ந்தும் சிறந்த ஒரு மாக்சிச - லெனினிசக் கட்சியாக வளர்த்தெடுத்தார். தோழர் ஸ்டாலினின் உறுதியான கட்சித் தலைமையானது சோவியத் பாட்டாளிவர்க்கத்தின் ஆற்றல்மிக்கத் திறமைகளை வெளிக்கொணர்ந்து மாபெரும் சோஷலிச நாடாக சோவியத்யூனியனைத் திகழச் செய்தது. தோழர் ஸ்டாலின் அவர்கள் சோவியத் கட்சிக்கும், 'சோவியத் அரசிற்கும் அளித்த மகத்தான தலைமையினுல்தான் இரண்டாவது உலக யுத்தத்தில் ஹிட்லரின் தலைமையிலான பாசிசம் படுநாசத்திற்காளாக்கப்பட்டது. ஹிட்லரின் சக்திமிக்க ராணுவத்திற்கும், பாசிசப் பயங்கரத்திற்கும் எதிராக தோழர் ஸ்டாலின் அவர்கள் சோவியத்நாட்டிற்கும் ஏனைய உலகநாடுகளுக்கும் வழங்கிய சாதனை ஒப்புயர்வற்றது என்றும் கூறலாம். ஏகாதிபத்தியவாதிகளுக்கும், முதலாளித்துவ — பிற்போக்கு வாதிகளுக்கும், ரொட்சிசவாதிகளுக்கும் தோழர் ஸ்டாலின் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார். அதேவேளை உலகப் பாட்டாளி வர்க்கத்திற்கும் ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும்-மக்களுக்கும் அவர் மகத்தான ஆசானுக-அன்புக்குரிய தோழனுக - மதிப்புக்குரிய நண்பனுகவே திகழ்ந்தார். இத்தகைய தோழர் ஸ்டாலின் அவர்களின் புகழையும், சாதனைகளையும் மறைப்பதற்கு நவீன திரிபுவாதத்தின் தலைவனுன குருசேவ் முயன்முன்; ஸ்டாலின் அவர்களின் சமாதி வைக்கப்பட்ட உடலை செஞ்சதுக்கத்திலிருந்து அகற்றிப் புதைத்தான். அவ்வாறு செய்தும்கூட தோழர் ஸ்டாலின அவர்களின் புகழையும், மக்கள் மத்தியில் இருந்த மதிப்பையும் குறைக்க முடியவில்லை. இன்று ஒரு சமூக ஏகாதிபத்திய நாடாக மாறி, தனது மக்களுக்கும், உலக மக்களுக்கும் எதிராகச் செயல்பட்டு வரும் சோவியத் ஆளும் சமூக ஏகாதிபத்தியக் கும்பலை நிச்சயம் மாபெரும் தலைவர்களான லெனின் — ஸ்டாலின் ஆகியோரின் பெயர்களால் ரஷ்யப் பாட்டாளிவர்க்கமும் ஏனைய உழைக்கும் மக்களும் ஒன்றிணைந்து வீழ்த்துவார்கள், அவர்களது போராட்டத்திற்கு உலகப்பாட்டாளி வர்க்கமும், உலக மக்களும் தமது ஆதரவை வழங்குவர். இக்கைங்கரியத்திற்கான உறுதியை தோழர் ஸ்டாலின் நூற்றுண்டு தினத்தில் ரஷ்யப் பாட்டாளி வர்க்கமும் உலகப்பாட்டாளி வர்க்கமும் மேற்கொள்ளும் எனத் திடமாக நாம் நம்புகிறோம்.

**உண்மையான புரட்சிகரப் போராட்டம் மட்டுமே இறுதி விடுதலையை வென்றெடுக்கும்!**

# சமூக ஏகாதிபத்தியம் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி

அண்மையில் சோவியத் யூனியனிலிருந்து வெளிவந்த செய்திகள் சிலவற்றை இங்கே குறிப்பிடவேண்டும். கட்சித் தலைவர் பிரெஷ்னேவ் நாடாளுமன்றத்தில் பேசியபொழுது தற்சமயம் அந்நாடு எதிர்நோக்கும் பாரதூரமான பொருளாதாரப் பிரச்சினைகளை விவரித்தார். இவ்வருடம் எதிர்பார்த்ததிலும் பார்க்க ஐந்துகோடி தொன் தானியம் குறைவாகவே கிடைக்கப் பெற்றுள்ளது. இது பெரும் வீழ்ச்சியாகும். இதன் விளைவுகளும் மோசமானவையாகவே இருக்கும். பல கோடிக்கணக்கான தொன் தானியத்தைக் குறிப்பாகக் கோதுமையை சோவியத் யூனியன் அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா முதலிய நாடுகளிடமிருந்து வாங்கவேண்டும். பல மாதங்களுக்கு முன்னரே அமெரிக்க பத்திரிகைகள் இதுபற்றி எழுதத் தொடங்கியிருந்தன. ரஷ்யாவுடனான பேச்சுவார்த்தைகளிலும், பேரம்பேசுதல்களிலும் இது முக்கியமாக அமைய வேண்டும் என்று சில அமெரிக்க அரசியல் பிரமுகர்கள் கூறியும் வந்தனர். ரஷ்யாவைப் பொறுத்தவரையில் இது புதிதல்ல. கடந்த சில வருடங்களாகவே விவசாயத்தில் பல பிரச்சினைகளையும் வீழ்ச்சிகளையும் அது கண்டிருக்கிறது. விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் உள்ள முரண்பாட்டின் விளைவாகவே இப்பிரச்சினை தோன்றியது.

ஆனால் இந்த வருடம் கைத்தொழில் துறையிலும் பல சிக்கல்கள் எழுந்துள்ளன எனத் தெரியவருகிறது. பிரஷ்னேவ் தன்னுடைய உரையின்போது குறிப்பிட்ட தகவல்களில் ஒன்று, மக்கள் பயன்படுத்தும் பாவனைப் பொருட்கள் எல்லாமே பற்றாக்குறையாக இருக்கின்றன என்பதாகும். பற்பசையிலிருந்து பால்மாவரை கட்டுப்பாடாக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சோஷலிசமுகாமிற்குத் தலைமைதாங்குவதாகக் கூறிக்கொள்ளும் ஒரு நாட்டில் இந்த நிலைமை காணப்படுவது கவனமாகச் சிந்திப்பதற்கு உரியதொன்று.

இவ்விடத்திலே இருவிஷயங்களைக் குறிப்பிடலாம். ஒன்று விவசாய உற்பத்தி, பாவனைப் பொருள்கள் ஆகியனபற்றி குருச்சேவ் காலத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்த தவறான கொள்கையும்போக்குமாகும். அதனை நன்கு உணர்ந்தபடியாலேயே சீனாவில் மாஓசேதுங் அவர்கள் "பத்து பிரதான உறவுகள்" என்ற கட்டுரையில் விவசாயத்திற்கும்கைத்தொழிலுக்கும் இருக்கவேண்டிய நுட்பமான உறவைக் குறிப்பிட்டிருக்கிறார். இயற்கைக் கோளாறுகள் விளைச்சலைக் குறைத்த காலங்களிற்கூட சீனாவில் விவசாய உற்பத்தியில் இத்தகைய வீழ்ச்சிகள் ஏற்படவில்லை. அதுபோலவே மக்களின் பாவனைப் பொருட்களுக்கும் பற்றாக்குறை நிலவியதில்லை. வருடாவருடம் உற்பத்தி பெருகியே வந்திருக்கிறது. சுபிட்சமும் அதிகரித்தே வந்திருக்கிறது.

இன்னுமொரு முக்கியமான காரணமும் உண்டு. சமூக ஏகாதிபத்திய நாடாக சோவியத்யூனியன் மாறிய பின், மேலாதிக்க வல்லரசு என்ற முறையில், உலகின் பல பாகங்களிலும் தலையீடு செய்து இராணுவ தளபாடங்களை விற்பனை செய்ய முற்பட்டதனால் அதன் பொருளாதாரத்திலே பல முரண்பாடுகள் தோன்றின. ஒரு காலத்தில் பிரிட்டன், அமெரிக்கா முதலாளித்துவ நாடுகள் எப்படி ஆயுதங்களையும் யுத்த தளபாடங்களையும் பெருமளவில் சப்ளை செய்யும் நாடுகளாக இருந்தனவோ, அவற்றைப்போலவே இப்பொழுது உலகில் பல நாடுகளுக்கு கோடிக்கணக்கான டொலர்களுக்கு ரஷ்யா பல வகைப்பட்ட இராணுவ கருவிகளையும், யந்திரங்களையும் சாதனங்களையும் விநியோகிக்கும் நாடாக இருக்கிறது. உதாரணமாக கியூபா வியதநாம், எதியோப்பியா, ஆப்கானிஸ்தான், யெமென், அங்கோலா முதலிய நாடுகளுக்கு ரஷ்யா பலகோடிக் கணக்கான டொலர்கள் பெறுமதியான தளபாடங்களை விநியோகிக்கிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் இதில் சம்பந்தப்படுத்துகிறது என்பது உண்மையே. எதியோப்பியாவிற்கு ரஷ்ய ஆணையின்படி கிழக்கு ஜெர்மனியே சப்ளை செய்கிறது. அதுபோலவே அங்கோலா பெருமளவு ஆயுதங்களை வழங்குகிறது. இதனால் அந்த நாடுகளிலும் பல விதமான பொருளாதார சிக்கல்கள் எழுகின்றன. நேரடியான ஆதிக்கத்தில் இல்லாத இந்தியா போன்ற நாடுகளுக்கும் "நட்புறவு ஒப்பந்தங்கள்" என்ற போர்வையில் ரஷ்யா பெருவாரியான ஆயுதங்களை வழங்குகிறது. மிக அண்மையில் கியூபா மூலமாக நிகரகுவா நாட்டிற்கு ஆயுத விற்பனை செய்ய முயன்றிருப்பதாகச் செய்தி அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மத்திய கிழக்கில் ரஷ்யா "நட்புறவு" கொடிகட்டிப் பறந்த காலத்திலே, குறிப்பாக எகிப்துடன் நேசம் நிலவிய காலப் பகுதியிலே எகிப்து, சிரியா, ஈராக், அல்ஜீரியா முதலிய நாடுகளுக்கு மாத்திரம் 500 கோடி டொலர் பெறுமதியான யுத்த தளபாடங்களை ரஷ்யா சப்ளை செய்திருக்கிறது. இன்று இந்த நாடுகள் எதிலும் சோவியத் செல்வாக்கு சிறிதளவேனும் இல்லை; விழலுக்கு இறைத்த நீர்தான். ஆனால் இத்தகைய மேலாதிக்க முயற்சிகளால் ரஷ்ய மக்கள் பலவகையான கஷ்டங்களுக்கு ஆட்பட்டுள்ளனர். தவறான பொருளாதாரக்கொள்கை, அளவுக்கு அதிகமான இராணுவச் செலவினங்களோடு தொடர்புடையதே. ரஷ்ய மத்திய உளவறியும் நிறுவனமாகிய கே.ஜீ.பி. என்பதன் செலவினம் ஒருகாலததில் உலகெங்கும் நாசவேலைகளிலும், படுகொலைகளிலும் மூழுமூச்சாக ஈடுபட்டிருந்த அமெரிக்க மத்திய உளவறியும் ஸ்தாபனமான சி.ஐ.ஏ.க்கு சமானமாக இன்று ரஷ்யாவின் ஒற்றர்கள் உலகம்முழுவதும் செயல்படுகின்றனர். அந்த நிறுவனத்தின் செலவும் இராட்சஸ வடிவில் இருக்கிறதும் இவை யாவற்றாலும் ரஷ்யாவின் ஆளும் கும்பல் உலகளாவிய அதிகாரப் பொலிவுடன் விளங்கினாலும், ரஷ்ய மக்கள் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றிலே பற்றாக்குறையை அனுபவிக்கின்றனர். உலகின் மிகப் பெரிய இராணுவ வல்லரசுகள் இரண்டில் ஒன்றான ரஷ்யாவில் அத்தியாவசியப் பொருள்களுக்கும் அந்நிய நாடுகளை எதிர்பார்த்திருப்பது என்பது விசித்திரம்தான்; விபரீதமும்தான்!

★

## உலக அரங்கில் — அங்கும் இங்கும் ★ உதயன்

### தாய்லாந்தையும் அச்சுறுத்தும் வியட்நாம் விஸ்தரிப்பாளர்!

சில மாதங்களுக்கு முன் இப்பகுதியில் நாம் எழுதியிருந்தது இப்பொழுது நிதர்சனமாகிவிட்டது, கம்பூச்சியாவில் மிகக்கோரமான பஞ்சமும் பட்டினி நிலைமையும் தோன்றும் என்றும், வியத்நாமியப் படையெடுப்பின் நேரடி விளைவாகவே இவை உருவாகின என்றும் எழுதியிருந்தோம். இப்பொழுது உலகநாடுகள் பல கோடிக் கணக்கான டொலர் பெறுமதியான உணவு உதவியை கம்பூச்சிய அகதிகளுக்கு வழங்கப் பெருமுயற்சி எடுத்துவருகின்றன. அதைக்கூட வியத நாமியர் பலவேறு வழிகளில் தடுத்து, அவ்வுணவு உதவிகளை தமது படைகளுக்குப் பயன்படுத்தி வருவதாக அங்கு போய் வந்த பத்திரிகை நிருபர்கள் கூறியுள்ளனர். அண்மையில் பி.பி.சி ஒலிபரப்பு நிலையத்தின் செய்தியொன்றில் வழங்கப்படும் உதவிகளில் பெருமளவு வியத்நாமியர் கைகளில் சிக்கிவிடுவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

உலக மக்களின் கவனம் பட்டினியால் பரிதவித்து மடியும் கம்பூச்சிய மக்களின்மேல் இருக்கும் இவ்வேளையில் சோவியத்யூனியனும் அதன் சூத்திரப்பாவையான வியத்நாமும் தாய்லாந்துமீது கண் போட்டு வருகின்றன. தாய்லாந்து இராணுவ தலைமைப் பீடத்தின் தகவல் பிரிவின் தலைவர், ஜெனரல்சொங் கடப்பன் என்பவர் சில தினங்களுக்குமுன் பத்திரிகை நிருபர்களுடன் உரையாடுகையில் பின்வருமாறு கூறினார்:-

"சோவியத்யூனியன் தனது சர்வதேச அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு நமது பிராந்தியத்தில் தாய்லாந்தை ஒரு மிதிகல்லாக மாற்றவிரும்புகிறது அது தற்சமயம் தாய்லாந்துமீது கண்போட்டு வருகிறது என்பது தெளிவாகி வருகிறது. இதற்கு கருவியாக ஹனோய் ஆட்சி பயன்படலாம். வியத்நாம் சோவியத்யூனியனுடைய ஆதரவைப் பெற்றிருப்பதால் எந்நேரமும் தாய்லாந்தைத் தாக்க முற்படலாம். ஐ.நா. சபையிலே பெரும்பான்மை வாக்குகளால அந்நிய படைகள் யாவும் கம்பூச்சியாவிலிருந்து வெளியேற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் அலட்சிய மனோபாவத்துடன் வியத்நாம் அங்கு மேலும்மேலும் துருப்புக்களைக் குவித்து வருகிறது. கம்பூச்சியாவில் யுத்தம் நாளுக்குநாள் உக்கிரமடைந்து வருகிறது. இதனால் தாய்லாந்து எந்நேரமும் போரில் இழுபடலாம். வியத்நாமியர் தாய்லாந்தையும் ஆக்கிரமிக்க எண்ணினால் ஆச்சரியப்படுவதற்கில்லை நமது படைகள் தாயகத்தைப் பாதுகாக்க பரிபூரணமான தயார்நிலையில் இருக்க வேண்டியிருக்கிறது"

ஜெனரல் கடப்பனின் கூற்றுக்கு சான்று பகருவது போல கடந்த சில வாரங்களுக்குள் தாய்லாந்து படைகள் கம்பூச்சிய எல்லைப் பிரதேசங்களில் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. தாய்லாந்து காலாட்படையின் முதலாம் இரண்டாம் பிரிவுகள் இப்பொழுது கிழக்கு எல்லைப்பிரதேசத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றுக்குத் துணையாக எம்-48 தாங்கிப்படைகளும் அனுப்பப்பட்டுள்ளன.

எல்லைக்கு அப்பால், கம்பூச்சியாவிற்குள் சுமார் எழுபதினாயிரம் வியத்நாமியப் படைகள் போரிடுவதில் ஈடுபட்டுள்ளன. தாய்லாந்து தகவல்களின்படி வியத்நாமுக்கு ரஷ்யா வழங்கியிருக்கும் பெரிய ஹெலிகொப்டர்களும் மிக்-19, மிக்-21 போர் விமானங்களும் தாய்லாந்து எல்லைகளில் போரில் சம்பந்தப்பட்டுள்ளனவாம். கனரக பீரங்கிகளும், விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் எல்லையில் வியத்நாமியரால் வைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் பெரிய எல்லைப்புற யுத்தம் ஒன்றுக்கு வியத்நாம் ஆயத்தம் செய்வதையே குறிப்பதாக தாய்லாந்து அவதானிகள் கருதுகின்றனர். கம்பூச்சியாவையும், லாவோசையும் விழுங்கிவரும் வியத்நாம் சோவியத்யூனியனது ஏவலின் பேரில் தாய்லாந்தில் கை வைக்குமா? இதுவே, ஆசிய அவதானிகள் பலர் கேட்கும் கேள்வி. தாய்லாந்து இராணுவ வட்டாரங்கள் கூறும் தகவல்களின்படி கடந்த நான்கு மாதங்களாக சோவியத் போக்குவரத்து விமானங்கள், அதாவது பெரும்பாரம் தூக்கிச்செல்லும் சரக்கேற்றும் விமானங்கள் ஒவ்வொரு மாதமும் சராசரி எண்பதைந்து தடவைகள் தாய்லாந்துக்கு மேலாக வியத்நாமுக்குப் பறந்து சென்றுள்ளன. இவை இராணுவத் தளபாடங்களை ஏற்றிச்செல்லும் இராட்சத விமானங்கள். அடுத்த சில மாதங்களில் அப்பிராந்தியத்தில் மோசமான நெருக்கடி நிலைமை தோன்றக்கூடும் என்றே சிங்கப்பூரில் உள்ள ஆசிய பத்திரிகை நிருபர்கள் கருதுகின்றனர்.

★

### ஆப்கானில் அதிகரித்துவரும் சோவியத் படைகள்

ஆப்கானிஸ்தான் விவகாரங்கள் குறித்து அவ்வப்போது இப்பகுதியில் எழுதி வந்திருக்கிறோம். சேற்றிலே சிக்கிக்கொண்டவன் மேலும் மேலும் ஆழமாக அதிலே அமிழ்ந்து போவதுபோல் சோவியத்யூனியன் அதிகமாக அந்த நாட்டு உள் விவகாரங்களிலே தலையிட்டு வருகிறது. தலைநகரைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் நிலைகொண்டிருக்கும் தேசிய விடுதலைப்படைகளைப் பலவீனப்படுத்தி அப்புறப்படுத்தும் நோக்கத்துடன், ஆப்கான் ஆட்சியினர் புதிய இராணுவ தாக்குதல்களை இப்பொழுது மேற்கொண்டிருக்கின்றனர். இதனை சோவியத் "ஆலோசகர்கள்" முழுமுழுக்க நெறிப்படுத்துவதாக கபூலிலிருந்து வெளிவரும் இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன. ஒரு நம்பகமான செய்தியின்படி, இப்பொழுது ஆப்கானிஸ்தானிலே நாலாயிரம் சோவியத் இராணுவ வீரர்களும், ஆயிரத்து ஐந்நூறு ஆலோசகர்களும் இருக்கின்றனராம். பணிப்புரைகள் தயாரித்தல் போர்முறைகளை விளக்குதல், மேற்பார்வை செய்தல் முதலிய முக்கியமான வேலைகளை இப்பொழுது ரஷ்யர்களே செய்து வருகின்றனர் என்று அச்செய்தி தெரிவிக்கின்றது. சோவியத் விமானிகள் ஆப்கான் விமானங்களை ஓட்டிச் சென்று கிளர்ச்சிப்படைகள் மீது தாக்குதல் நடாத்துவதும் சாதாரணமாகி விட்டது என்று பிறிதொரு செய்தி கூறுகிறது. அரசியல் தீர்வு காணும்வரை இந்த நிலைமையே நீடிக்கும்.

★

### டாங்கேயின் வெளியேற்றம்

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் தத்துவார்த்த அடிப்படையில் பிளவுபட்ட வேளையில் திரிபுவாதக் கட்சியின் தலைமைப்பீடத்தில் இருந்தவர்களில் முக்கியமானவர் எஸ்.ஏ. டாங்கே இந்திய புரட்சிவாதிகளால் எப்பொழுதோ அம்பலமாக்கப்பட்டு, நேருவின் தாசனாக விளங்கிய டாங்கே, திரியுவாதிகள் இந்தியாவில் சீர்குலைவுப் பாதையில் அதிகதூரம் போவதற்கு வழிகோலியவர். அண்மையில் இந்திராகாந்திக்குப் பகிரங்க

( 6 ஆம் பக்கம் பார்க்க)

**ஏகாதிபத்தியங்களை இல்லாதொழிக்கும் வரை யுத்தங்களை இல்லாதொழிக்க முடியாது!**

# அடக்குமுறைச் சட்டங்களால் மக்கள் எழுச்சியை தடுக்கமுடியாது!

## யாழ். கூட்டத்தில் - தோழர் செந்தில்

இன்றைய யூ. என். பி. அரசின் மோசமான நடவடிக்கைகளால் தொழிலாளி வர்க்கமும் ஏனைய உழைக்கும் மக்களும் விரக்தியும் வெறுப்பும் அடைந்துள்ளனர். மக்களது விரக்தியையும், வெறுப்படைந்த நிலையையும் கண்டு அரசாங்கம் அஞ்சி நடுங்குகின்றது. எந்த நேரமும் மக்கள் தமக்கு எதிராகக் கிளர்ந்தெ

வின் உயர்வைக்] கண்டித்தும் தமிழ் மக்களின் நியாமான உரிமைகளை வற்புறுத்தியும், பிரிவினைக்கோரிக்கையை நிராகரித்தும் மேற்படி கூட்டம் நடை பெற்றது. பெரும் தொகையான மக்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் தோழர் செந்தில் தொடர்ந்து உரையாற்றுகையில் தமிழ் மக்களின் இன, மத, மொழி, பிரதேச, கலாச்சார உரிமை

சுதந்திரங்கள் இன்று மக்களை எவ்வாறு வாட்டி வதைக்கின்றது என்பதையே நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். நமது நாடு சுதந்திரம், ஜனநாயகம் தார்மீகம் ஆகியவற்றின் பெயரால் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு அடகு வைக்கப்பட்ட நிலையிலும், உள்நாட்டு பெரு முதலாளித்துவ சக்திகளின் பிடியிலும் இருப்பதைத் தான்

ரணமாக வடபகுதி விவசாயிகள் உப உணவு உற்பத்தியின் மூலம் நன்மை பெற முடிந்தது. ஆனால் யூ. என். பி. வடபகுதி விவசாயிகளை முற்றாக முடங்கச் செய்யும் அளவிற்கு உப உணவு இறக்குமதியை ஊக்கப்படுத்தியுள்ளது. எனவே இந் நாட்டின் தொழிலாளி வர்க்கமும் சகல உழைக்கும் மக்களும் இன மத பேத

மின்றி ஒன்றுபட்டு புரட்சிகரப் போராட்ட இயக்கங்களைக் கட்டி எழுப்புவது அவசியமாகும் என்றும் கூறினர்.

மேலும் தோழர்கள் நிகால் டயஸ், வை. வன்னியசிங்கம், சோ. தேவராசா, இ. தம்பையா ஆகியோர் உரையாற்றினர்.

## அமிர் மௌனம் ஏன்?

சில மாதங்களுக்கு முன் வியட்னும் விஸ்தரிப்புவாதிகளுக்கு எதிராகச் சீனு தற்பாதுகாப்பிற்கான பதிலடித் தாக்குதலை மேற்கொண்டபோது "சீன ஆக்கிரமிப்பு" என சமூக ஏகாதிபத்திய ஏஜன்டுகளுடன் சேர்ந்து ஒலம் வைத்தவர் திரு. அமிர்தலிங்கம் ஆவார். அன்று உண்மையை மறைத்து சீன ஆக்கிரமிப்பு என உளறியவர், இன்று ஆப்கானிஸ்தானில் 50 ஆயிரம் சோவியத் படைகள் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது பற்றி மௌனம் சாதிப்பது ஏன் என்பதே தமிழ் மக்களினதும்-இளைஞர்களினதும் கேள்வியாக உள்ளது.

## சுதந்திரம் என்ற பெயரால் மக்கள் ஏமாற்றப்பட்டனர்! — தோழர் தர்மசேகரா

மூலாம் என்பதை உணர்வதாலேயே அரசாங்கம் அடக்குமுறைச் சட்டங்கள் பலவற்றை உருவாக்கியுள்ளது. தமக்கு எதிராக இழைக்கப்படும். அநீதிகளைப் பொறுத்துக் கொள்வதற்கு மக்களுக்கும் ஒரு கால எல்லை உண்டு. அந்த எல்லையை தாண்டினால் மக்களது எழுச்சியை எந்த அடக்குமுறைச் சட்டங்களாலும் அடக்கிவிட முடியாது.

மேற் கண்டவாறு டிசம்பர் 15ம் திகதி யாழ்ப்பா

கள் "எவ்வகையிலும் இரண்டாம்தர நிலைமைக்குத் தள்ளப்படுவதை எமது கட்சி ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. எமது கட்சி தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையும், அவர்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதையும் எவ்வித சந்தேகமும் இன்றி ஏற்றுக் கொள்கின்றது. அதே வேளை பிரிவினைக் கோரிக்கையை வன்மையாகக் கண்டித்து நிராகரிக்கின்றது. சுயநிர்ணய உரிமையை பிரிவினைக் கோரிக்

காண முடிகின்றது. எனவே இந் நிலையை நமது நாட்டுத் தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் நன்கு உணர்ந்து சரியான புரட்சிகர வழிகளில் செயல்படுவது அவசியம் எனவும் கூறினர்.

தோழர் காசிம் பேசுகையில் மாறி மாறி ஆட்சிகள் மாறிவந்துள்ள போதிலும் மக்களுடைய வாழ்வில் எவ்விதமான மாற்றத்தையும் காண முடியவில்லை. யூ. என். பிக்கு மக்கள் வாக்களித்த போது தமக்குப் பெரும் நன்மைகள்

## பொதுஎதிரியை இனங்கண்டு புரட்சிகரப் போராட்டங்களை முன்னெடுப்போம் — தோழர் காசிம்

ணத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) அதன் தலைமையிலான நவலங்கா தொழிற் சங்கம், தேசபக்த வாலிபர் இயக்கம் ஆகியவை ஒன்றிணைந்து நடத்திய கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் தோழர் கே. செந்திவேல் கூறினர். அவசரகாலச் சட்டத்தை எதிர்த்தும், மக்களின் ஜனநாயக உரிமைகளை வற்புறுத்தியும், வாழ்க்கைச் செல

கைக்குச் சமப்படுத்த சிலர் முயல்வதையும் நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் கூறினர்.

அடுத்து தோழர் ஜி. ஐ. டி தர்மசேகரா பேசுகையில் அந்நியர்கள் நம் நாட்டில் இருந்து சென்ற காலம் முதல் நம் நாட்டு முதலாளித்துவ அரசியல் தலைவர்கள் சுதந்திரம், சுதந்திரம் என்று உரத்துக் கூறி வந்துள்ளனர். ஆனல் அத்தகைய

வரும் என்றே எதிர்பார்த்தனர். ஆனல் இன்று இரண்டரை வருட ஆட்சியில் யூ. என். பி யானது விலைவாசி உயர்வையும், வேலையின்மையையும், அடக்குமுறைச் சட்டங்களையும் தான் மக்களுக்கு வழங்கியுள்ளது, கடந்த அரசாங்கம் மக்களுக்கு எதிராகச் செயல்பட்ட போதிலும் ஒரு சில நன்மைகளையாவது மக்கள் அனுபவிக்க முடியாது. உதா

## யூ. என். பி. ஆட்சியில் கூட்டணி........

1-ம் பக்கத் தொடர்ச்சி

கொள்ளப்படுகின்றது. நிர்வாகத்தைப் பரவலாக்கும் ஜனதிபதி ஆணைக்குழுவின் சிபார்சுகள் வெளிவந்ததும் தமிழர் பிரச்சினை யாவும் தீர்ந்துவிடும் என்ற ஒரு மாயை பரப்பப்படுகின்றது. இந்த மாயையைப் பிரசாரப்படுத்த முனைபவர்கள் யூ. என். பி. முதலாளிகளுடன் தம்மைச் சமநிலையில் வைத்திருக்கும் உயர் வர்க்கத் தமிழ்ப் பிரமுகர்களேயாவர். இந்த உயர் வர்க்கத் தமிழ்ப் பிரமுகர்களினதும் அவர்களின் தமிழர் கூட்டணியினதும் சார்பாகவே ஜனதிபதி ஆணைக்குழுவில் கலாநிதி நீலன் திருச்செல்வம் இடம்பெற்றுர். இத்தகைய உயர்வர்க்கத் தமிழர்கள்தான் தமிழர்கூட்டணியின் கொள்கை வகுப்போராகவும் உள்ளனர். இவர்களே தமிழர் கூட்டணியை யூ.என்.பி. ஆட்சியில் பங்கு கொள்வதற்கு வதற்கான நிலைக்கு தள்ளி வருகின்றனர். இவர்களது

முயற்சிக்கு கூட்டணியின் தலைமைப்பீடத்திலும் கணிசமான எம். பீ. மார்களிடத்திலும் போதிய ஆதரவு கிடைத்துவருவதாக அறியப்படுகின்றது. தமது உள்ளக்கிடக்கையை கூட்டணி எம். பீ.க்கள் பலர் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தி அரசையும் மந்திரிமார்களையும் புகழ்ந்து பேசியுள்ளனர். இருந்தபோதிலும் தாங்கள் அரசில் ஒரு அங்கமாகச் சேர்வதற்கு கடந்த தேர்தல்கால வாக்குறுதியானது பெரும் தடையாக இருப்பதையும் கூட்டணித்தலைவர்கள் உணருகின்றனர். எனவே அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவிட்டாலும் அதற்கு சமப்படுத்தி ஏமாற்றக்கூடிய அளவிற்குப் பெயரளவிலான ஏதாவது கிடைத்தால் யூ. என். பி. ஆட்சியில் தமிழர்கூட்டணி பங்கு கொள்ளும் சூழ்நிலையே நிலவுகின்றது.

தமிழ்த் தலைவர்களின் கடந்தகால வரலாற்றையும், தற்போதைய யூ. என். பி. த் தலைவர்களின் சைகைகளையும் ஊன்றி அவதானித்தால் அரசாங்கத்தில் கூட்டணியினர் ஒரு அங்கமாகி தேசிய அரசாங்கமாக இயங்கக்கூடிய சாத்தியக்கூறே பெருமளவு தென்படுகிறது. அதேவேளை தமிழ் மக்களும்-இளைஞர்களும் நிச்சயம் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்பதாலேயே மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஒரு சுய ஆட்சிக்கான அமைப்பு என்ற பிரசாரத்தை கூட்டணி வட்டாரங்கள் மெல்ல மெல்ல பிரசாரப்படுத்த ஆரம்பித்துவிட்டன. இச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களினது உண்மையான உரிமைகளில் அக்கறைகொண்ட தமிழ்மக்களும்-இளைஞர்களும் தமிழ்த் தலைவர்களின் சுயரூபத்தைத் தெரிந்துகொள்வார்கள் என நம்புகின்றோம்.

## பயங்கரவாதம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத்துடன் சமப்படுத்திவிடவும் முடியாது. பயங்கரவாத நடவடிக்கைகளும் பலாத்காரமானது; புரட்சிகரப் போராட்டங்களும் பலாத்காரமானது. எனவே இரண்டும் சரியானவையோ அல்லது ஒரேவிதமானவை என்றோ கொள்ள முடியாது. முன்னையது வர்க்கப் போராட்டத்தையோ தொழிலாளிவர்க்கத்தின் தலைமையையோ அல்லது வெகுஜனங்களின் பிரமாண்டமான போராடும் சக்தியையோ ஏற்றுக்கொள்ளவில்லை; பின்னையது மேற்கூறியவற்றை அங்கீகரித்து சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தி மக்களுக்கு இறுதியான விடுதலையைத் தேடிக்கொடுப்பதாகும். எனவே இக்கட்டுரையில் குறிப்பிட்ட இருவகையான பயங்கரவாதத்தையும் மாக்சிசவாதிகளாகிய நாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆதலால் பயங்கரவாதம் எங்கிருந்துவந்தாலும யாரால் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அது எதிர்க்கப்பட வேண்டியதாகும். மாக்சிசத்திற்கும் மக்களுக்கும் எதிரான பயங்கரவாதத்திற்குப் பதிலாகப் புரட்சிகர பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட மக்களின் பரந்த புரட்சிகரப் போராட்டப் பாதைமட்டுமே இறுதியான அடிப்படையான சகல அடக்குமுறைகளையும் ஒழிப்பதற்கான பாதையாக இருக்க முடியும்.

★

## குடும்பக்கட்டுப்பாடு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உதாரணமாக இலங்கை சினிமாச் செய்தித் திரைப்படத் துறை குடும்பக்கட்டுப்பாடு பற்றிய செய்திப்படங்களை மலையகத்தில் வர்ண ஒலியத்தில் தமிழ் விபரிப்புடன் திரையிடுகின்றது. ஏனைய செய்திகள் எல்லாம் கறுப்பு வெள்ளையாக சிங்கள விபரிப்புடனும் திரையிடுகின்றது. எனவே இவ்வாறு ஒரு வர்க்கத்தை ஒரு இனத்தைத் திட்டமிட்டு பலாத்காரமாகக் கட்டுப்படுத்துவதை அரசு தவிர்க்கவேண்டும்.

## ஆளும் கட்சிக்குள்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரிகளாக்கப் படவுள்ளனராம். இது கட்சி-அரசின் உயர் மட்டத்தில் பெரும் மோதலை ஏற்படுத்தும் என்றே நம்பப்படுகின்றது.

இவ்இக்கட்டான நிலையை உணர்ந்தே விரைவில் ஒரு பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் என்ற ஒரு சாராரின் அபிப்பிராயமும், தமிழர் கூட்டணியை அரசாங்கத்தோடு இணைத்துக்கொள்ளல் வேண்டும் என்ற வேறொரு சாராரின் அபிப்பிராயமும் அரசாங்க உயர் மட்டத்தில் நிலவுகின்றது. எவ்வளவுதான் அரசாங்கமும் அதன் தலைவர்களும் மக்களை ஏமாற்ற முனைந்த போதிலும் வளர்ந்துவரும் மோசமான பொருளாதார நெருக்கடிகள் அரசாங்கத்திற்கு கடும் சோதனைக்கட்டத்தையே உருவாக்கியுள்ளது. வருட ஆரம்பத்தில் எண்ணெய் விலை ஏற்றமும் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பும், ஏனைய நெருக்கடிகளும் மக்களை நோக்கி பெரும் அபாயமாகத் திருப்பப்பட்டவுள்ளது. இந்நிலையில் அரசாங்கம் உள்ளாலும் வெளியாலும் உள்ள நெருக்கடிக்கு முகம் கொடுத்தேயாகவேண்டும். இச் சந்தர்ப்பத்தில் தொழிலாளி வர்க்கமும், ஏனைய உழைக்கும் மக்களும் தமது ஒன்றுபட்ட, ஐக்கியப்பட்ட நடவடிக்கைகளை உறுதியுடன் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்,

★

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக ஆதரவு தெரிவித்ததற்காக, திரிபுவாதக்கட்சியே அவரைக்கண்டித்து, கட்சியின் தலைவர் பதவியிலிருந்து அகற்றியுள்ளது. பாராளுமன்ற ஜனநாயகப் படுகுழியில் மட்டுமல்ல படுமோசமான சந்தர்ப்பவாதங்களிலும் கட்சியையே ஈடுபடுத்திய டாங்கே கம்யூனிச இயக்கத்தால் எப்பொழுதோ தூக்கி எறியப்பட்டவர். அத்தகைய தலைவர்கள் இருப்பதனாலேயே இந்தியா, இலங்கை முதலிய நாடுகளில் புரட்சிகர இயக்கம் களங்கமடைந்து, பலவீனப்பட்டு தேங்கி நின்றுள்ளது. இவ்வளவு காலம் தாழ்த்தியேனும் டாங்கே தூக்கி எறியப்பட்டது ஆச்சரியமல்ல.

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம், 93, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
வெளியீடு: இ. நவரத்தினம், 15/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.